முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1183

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.12.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான சக்தியே அரங்கா வாழ்க
ஞானிகள் துணைகொண்ட தேசிகா வாழ்க
வானவர்கள் போற்றுகின்ற வள்ளலாய்
வல்லமைபட தர்மம் புரிகின்ற அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 10 ம் நாள் 25.12.2022, ஞாயிற்றுக்கிழமை)
ஊழ்வெல்லும் மகா சக்தி படைத்த ஞானியே
உலகை மாற்றவந்த மாதவசியே
3. தவசியே உந்தன் சக்திக்குள்ளே
தரணியோர் சரணாகதி கொண்டுவர
அவனியில் ஞான யுகமாற்றம்
ஆற்றல்பட அரங்கன் உன்சேவையாலே நடந்தேறும்
4. நடந்தேறும் தொண்டர்கள் மூலமாக இந்த மாற்றம்
ஞாலமதில் உலகமெங்கும் அன்னதான சேவையாக பரவி
பரவியே அரங்கன் சன்மார்க்கத்தை கொண்டே
பழுதின்றி ஆறுமுகன் யான் இந்த அற்புதத்தை
5. தரணி எங்கும் உருவாக்கி இனிதே உலகமெல்லாம்
தவசியர்கள் ஞானியர்கள் நிரம்பிய பூமியாக்கி
ஆக்கியே உலகத்தினில் ஞானிகள்
ஆட்சி உருவாகும் வண்ணம் ஆற்றல்பட தர்மத்தை பெருக்கி
6. மாற்றமாக ஆறுமுகன் யான்
உலகை வழி நடத்திச்
அரங்கன் தொண்டர்கள் மூலமே
ஞான ஆட்சி புரியச்செய்வேன்
7. செய்யவே இந்த சிறப்புமிக்க வல்லமை வரத்தை
ஐயமற அரங்கனுக்கு நித்தம் நித்தம் யான் வழங்கி மெய்யுடனே
ஆக்கம் தந்துவர மண்ணுலகோர் அரங்கனை வந்து சரணடைந்தால் போதும்
மாற்றம் கண்டு உலகினில் அற்புதம் நிகழ்த்தக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–